# யாழ். கடற்கரையோரப் பிரதேசத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சிக்கக்கூடாது!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர்

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சிகளை கைவிட வேண்டும், என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் முயற்சி எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியான நிலையில் அது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பகுதியை நம்பி நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில் புரியும் நிலையில் அதனைக் குழப்பும் விதத்தில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கடந்தகாலத்தில் அப்பகுதியில் கண்டல் தாவரங்களை நட்டுவிட்டு அரசாங்கம் திட்டமிட்டு காணிகளையும் இடங்களையும் அபகரிக்கின்ற செயற்பாடுகளாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

இந்தக் கபளீகர முயற்சி நடவடிக்கையை அரசாங்கம் கைவிட்டுவிட வேண்டும், எனவும் அவர் குறிப்பிட்டார். (01)




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 26 புதன்கிழமை 13.12.2023 கதிர் 133

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்! இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்து வரும் நிலையில் இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும், என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்து காணப்படும் சந்தர்ப்பத்தில் இந்த வரித் திருத்தங்களை பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், அவ்வாறு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. வரி அதிகரிப்பதை மக்கள் 2➤



## இளம் கிரிக்கெட் வீரர் ரிஷியுதனுக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு

கொழும்பு இந்துக் கல்லூரியின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான 10 வயது ரிஷியுதனின் குறிப்பிடத்தக்க திறமைக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் தமது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

சமீபத்தில் நடந்த பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில், ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டம் கூட விட்டுக்கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார்.

இந்த சாதனையைப் பாராட்டுவதற்காக, கனடிய தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் 2➤

## பண்டிகைக்கு முன் போனஸ் வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம்!

### அகில இலங்கை போக்குவரத்து தொழிலாளர் சங்கம்

டிசம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு இருபதாயிரம் ரூபா வருடாந்த போனஸ் வழங்கப்படாவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் சங்கம் தெரிவித்துள்ளது.

வருடாந்த போனஸ் தொடர்பாக பொறுப்பான அமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும், இதற்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அனைத்து இ.போ.ச. ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தயார் நிலையில் உள்ளனர் எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

போனஸ் வழங்கப்பட மாட்டாது, 2➤

## சாய்ந்தமருது மதரஸா விவகாரம் தொடர்பாக சிசிரிவி தொழிநுட்பவியலாளரிடம் வாக்குமூலம்!

அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள மதரஸாவில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சிசிரிவி தொழிநுட்பவியலாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள மதரஸா ஒன்றில் கடந்த ஐந்தாம் 2➤

## பெரிய வெங்காய விலை அதிகரிப்பு பின்னணியில் மாஃபியா கும்பல்!

இந்தியாவிலிருந்து பெரிய வெங்காய இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தியையடுத்து, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு உள்ளூர்க் களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ள பெரிய வெங்காயம் ஒரு கிலோ 250 மற்றும் 300 ரூபாய் வரை விலையை அதிகரித்து விற்பனை செய்வது தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு தம்புள்ளை பிரதேச 2➤

## இந்திய நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் புகுந்த இருவர் புகைக் குண்டுகளை வீசி கோசமெழுப்பியதால் பதற்றம்



2001ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டதன் நினைவு நாளான இன்று மக்களவைக்குள் அத்துமீறி இருவர் நுழைந்து களேபரம் செய்தது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அன்று, இந்தியாவின் பழைய நாடாளுமன்றக் கட்டத்துக்குள் பயங்கரவாதிகள் பாதுகாப்புத் தடுப்புகளை எல்லாம் உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்தினர். அவர்களை நாடாளுமன்ற வளாகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி சுட்டுக் கொன்றனர்.

இன்று புதிய நாடாளுமன்ற கட்டடத்துக்குள் எந்த சலசலப்பும் இல்லாமல், நான்கு கட்ட சோதனைகளைத் தாண்டி தடை செய்யப்பட்ட பொருள்களுடன் இருவர் உள்ளே நுழைந்து மக்களவைக்குள் உறுப்பினர்கள் அமரும் பகுதிக்குள் குதித்து, புகைக் குண்டுகளை வீசி களேபரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாடாளுமன்ற தாக்குதல் நினைவுநாளில், நாடாளுமன்றத்துக்கு வந்த உறுப்பினர்கள் அனைவரும், வெளியே, பயங்கரவாதத் தாக்குதலில் பலியான வீரர்கள் உள்ளிட்டவர்களுக்கு மலரஞ்சலி செலுத்தவிட்டு உள்ளே சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் மீண்டும் ஒரு பதற்றமான சூழ்நிலை மக்களவைக்குள் எழுந்தது. 2➤

# கிரிக்கெட் சபையைக் கலைக்க முடியாது அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவிப்பு



நாடாளுமன்றில் வெளியிடப்படும் எதிர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை கிரிக்கெட் சபையைக் கலைக்க முடியாது, என விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்றைய தினமும் இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கை கிரிக்கெட் சபையை உடனடியாகக் கலைக்க வேண்டும், என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் அவரது கருத்துக்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ, ஐ.சி.சி. தற்போது இலங்கை கிரிக்கெட் அணியை தடை செய்துள்ளது. இதனை விலக்கிக் கொள்ள நாம் அவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். இந்த நிலையில், பிரபலமாவதற்காக கிரிக்கெட்டில் ஊழல் உள்ளதாக கூச்சலிட்டுக் கொண்டிருப்பதால், இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

இங்கு நாடாளுமன்றில் கூறும் கருத்துக்களை ஐ.சி.சி. ஏற்றும் கொள்ளாது. இதனைப் புரிந்து கொள்ளாத எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இங்கே இருப்பதை நினைத்து நான் கவலையடைகிறேன், என்றும் அவர் குறிப்பிட்டார். (04)

## பெரிய வெங்காய விலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய வெங்காய மொத்த வியாபாரிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவில் பெரிய வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளதால், ஆரம்பத்தில் கிலோ 190 ரூபாய் முதல் 230 ரூபாய் வரை விற்கப்பட்ட பெரிய வெங்காயத்தை, நேற்றுக் காலை சடுதியாக ஒரு கிலோ 450 முதல் 500 ரூபா வரையான அதிகரித்த விலைக்கு இறக்குமதியாளர்கள் விற்பனை செய்தமையினால் மக்களும் விற்பனையாளர்களும் அசௌகரியத்திற்கு ஆளாகியுள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரிய வெங்காய விலையேற்றத்தின் பின்னணியில் வெங்காய மாஃபியா கும்பல் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டிய வர்த்தக சமூகத்தினர், ஒரேயொரு பெரிய வெங்காயத்தையேனும் புதிதாக இறக்குமதி செய்யாமல் ஏற்கனவே களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பெரிய வெங்காயத்தின் மூலம் இவர்கள் பெரும் இலாபம் ஈட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டிகைக் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்தக் கொள்ளையிடல் இடம்பெறுவதாகவும், அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு மக்களுக்குக் குறைந்த விலையில் அதிகளவிலான வெங்காயத்தை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ரெதி-06)

## இந்திய நாடாளுமன்றக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களவையின் பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த இருவர், திடிரென மக்களவையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குள் குதித்து, சர்வாதிகாரம் ஒழிக என்ற கோசத்துடன் அவர்கள் தங்கள் கையில் வைத்திருந்த புகைக் குண்டுகளை வீசியதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஆனால், இருவரும் குதித்த பகுதியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரிதமாக செயல்பட்டு இருவரையும் மடக்கிப் பிடித்து அவைக் காவலர்களிடம் ஒப்படைத்தனர்.

மக்களவைக்குள் புகைக் குண்டுகளை மர்ம நபர்கள் திறந்ததால் அங்கே மஞ்சள் நிறப் புகை சூழ்ந்து கொண்டது. இதனால், அங்கிருந்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அது வெறும் நிறப் புகைதான் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பதற்றம் தணிந்து, மக்களவை அரை மணிநேரத்துக்குப் பிறகு மீண்டும் கூடியது. (04)

## சாய்ந்தமருது மதரஸா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த 13 வயதுச் சிறுவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த மரணம் தொடர்பில் சிறுவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டு பொலிஸில் முறைப்பாடளித்ததைத் தொடர்ந்து, மதரஸாவின் நிரிவாகி கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து குறித்த மரணமானது கொலை, என சிறுவனின் பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. (04)

## இளம் கிரிக்கெட் வீரர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய ஆலோசகருமான ராஜ் தவரட்ணசிங்கம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் திகதி ரிஷியுதனின் இல்லத்திற்குச் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், கிரிக்கெட் மீதான அவரது ஆர்வத்திற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்

இதன் போது ரிஷியுதனின் குடும்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கனடிய தமிழ் காங்கிரஸ், குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான முச்சக்கர வண்டியின் குத்தகையை முழுமையாக செலுத்தியது. இது அவர்களின் நிதிச் சுமைகளைத் குறைப்பதுடன், ரிஷியுதனின் கிரிக்கெட் கனவுகளை அடைவதற்கு ஆதரவான சூழலை ஏற்படுத்தும்.

19 ஆவது வயதில் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் ரிஷியுதனின் கனவிற்கு கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என ராஜ் தவரட்ணசிங்கம் ரிஷியுதனின் பெற்றோரிடம் உறுதியளித்தார்.

கனேடிய தமிழ் காங்கிரஸ், தமிழ்ச் சமூகத்தில் உள்ள திறமைகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. கலாசார பெருமை மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் விளையாட்டுகளின் முக்கிய பங்கை ஒப்புக்கொள்கிறது.

ரிஷியுதன் போன்ற இளம் திறமையாளர்களின் கனவுகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவிற்காக எமது அமைப்பு நன்றி தெரிவிக்கிறது, என்று அவ்வமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டிகைக்கு முன் போனஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளதாக தெரிவித்த பொதுச் செயலாளர், இதன் காரணமாக இ.போ.ச. ஊழியர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரின் கருத்தின்படி இலங்கை போக்குவரத்துச் சபை நட்டத்தை அடைவதற்கு காரணம் இ.போ.ச. ஊழியர்கள் அல்ல, அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளே காரணம் எனவும் செயலாளர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இ.போ.ச. பேருந்துகளை அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்தியதன் மூலம் 420 மில்லியன் ரூபாவையும், அமைச்சர் பந்துல குணவர்தன 'சிட்டி' பஸ் சேவையை நடத்தியதன் மூலம் 85 இலட்சம் ரூபாவையும் இ.போ.ச. இழந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெதி-07)

## வரி செலுத்தாதவர்கள் மீது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிக்கொண்டாலும் அது தொடர்பில் மக்களிடம் எதிர்ப்பு இருக்கின்றது. வரி செலுத்துவதில் இருக்கும் வெறுப்பைப் பார்க்கிலும் வரி தொடர்பான நிர்வாகம் வலுவாகக் காணப்படாமையே இதற்குக் காரணம்.

வரி அதிகரிப்பதானது அரச வருமானத்தை ஈட்டுவதற்காக மாத்திரம் முன்னெடுக்கப்படும் மாற்று வழி அல்ல. வரி அறவிடல் மற்றும் வரி செலுத்தல் நடவடிக்கையில் அனைவருக்கும் அது சமமாகப் பகிரப்படுகின்றது.

அதேநேரம் வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அது தொடர்பிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும், என்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டார். (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி – மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# தந்தை செல்வாவின் 125 ஆவது செயந்தி நிகழ்வு 16 ஆம் திகதி கல்முனை கிறிஸ்டா இல்லத்தில்



(எம்.ஏ.றமீஸ்)

மாகாண செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தந்தை செல்வாவின் 125 ஆவது செயந்தி நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (16) கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

அட்டாளைச்சேனை சர்வமதக் குழுவின் தலைவர் ஹாஷிம் ஸாலிஹ் தலைமையில் இந்நிகழ்வு தந்தை செல்வானவின் பேரன் சட்டத்தரணி ச.இளங்கோவன் முன்னிலையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது.

'தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வும் தமிழ் முஸ் லிம் உறவும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை யினை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசூயா சேனாதிராஜா நிகழ்த்தவுள்ளார்.

'தந்தை செல்வாவின் அரசியல் நிலைப்பாடும் தமிழ் முஸ்லிம் ஐக்கியமும்' மீள் மதிப்பீட்டுரையினை சமூக அரசியல் ஆய்வாளர் அ.வா.முஹ்சீன் இதன்போது நிகழ்த்தவுள்ளார்.

இதேவேளை, 'தேசத்தில் பன்மைத்துவ சமூகம் ஒன்றிணைவதில் தந்தை செல்வாவின் தொலை நோக் குப் பார்வை' எனும் தலைப்பில் மட்டக்களப்பு இயசு சபை அருட்தந்தை ஜோசப்மேரி நிகழ்த்தவுள்ளார்.

'தந்தை செல்வாவின் மலையகம் குறித்த பார்வையும் பங்களிப்பும்' எனும் தலைப்பில் மலையக அரசியல் அரங்கம் அமைப்பின் தலைவர் மயில்வாகனம் திலகராஜா உரை நிகழ்த்தவுள்ளார்.

கவிஞர் ஏ.எம்.அனஸ் எழுதிய 'தந்தை செல்வா சீர்மை காவியம்' நூல் அறிமுகம் இடம்பெறவுள்ள இந்நிகழ் வின் போது, தந்தை செல்வா தொடர்பான பல்வேறு கருத் தாடல்களும் பல்வேறு சமூக சமய முக்கியஸ்தர்களின் கருத்துப் பகிர்வுகளும் இதன்போது இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்போருக்கு தொழில் நிலையங்களை பார்ப்பதற்கான வாய்ப்பு





(ஹஸ்பர்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கும் 60 மாண வர்களை தெரிவு செய்து, அவர்களை மாவட்ட ரீதியாக தொழில் நிலையங்களை பார்ப்பதற்கான ஒழுங்கு, மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையில் மாவட்ட செயலக தொழில் நிலையத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அராபத் மகா வித்தியாலயம், திரியாய் தமிழ் மகா வித்தியாலயம், நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, பெண்கள் உயர் நிலைப் பள்ளி, ராஜகிய வித்யாலோக வித்தியாலயம் போன்ற பாடசாலைக ளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாண வர்கள் திருகோணமலை தொழிநுட்ப கல்லூரி, உயர் தொழிநுட்பக் கல்லூரி, இறக்ககண்டி தொழில் பயிற்சி நிலையம் போன்ற இடங்களைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், மாவட்ட இணைப்பாளர் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெசினா பௌமி, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சஜிதா பானு, திறன் அபிவிருத்தி உத்தியோகத் தர் ஜீனத் பானு மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.





## "ஆடுகளும் ஓநாய்களும்" கவிதை நூல் திருகோணமலையில் வெளியீடு!

(ஹஸ்பர்)

திருகோணமலை நகராட்சி மன்றப் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் "நீங்களும் எழுதலாம்" எஸ்.ஆர்.தனபால சிங்கத்தின் "ஆடுகளும் ஓநாய்களும்" கவிதை நூல் வெளியீட்டு விழா கவிஞர் க.யோகானந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம் பமாகி நடைபெற்றது.

முதன்மை அழைப்பாளர்களாக சாகித்ய ரத்னா மு.சிவலிங்கமும், தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் ஏ.எப்.எம்.அஷ்ரஃபும் கலந்து சிறப்பித்தனர்

சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட ஊட கவியலாளர் திருமலை.நவமும், ஓய்வு பெற்ற உப-பீடாதிபதி ந.பார்த்தீபனும் கலந்துகொண்டனர்.

நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம் நியாஸ், ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒ.குலேந்திரன், "ஓசை" சஞ்சிகை ஆசிரியர் மூதூர்.முகைதீன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப் பித்தனர்.

வரவேற்புரையை ஊடகவியலாளர் அ.அச்சுதன் நிகழ்த்த, நூல் அறிமுக உரையினை திருமதி.சௌ.சந்திரகலா வழங்கி வைத்தார்.

முதல் பிரதியை மூத்த எழுத்தாளர் சூசை எட்வேட் நூல் ஆசிரியரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். நூலின் நயவு ரையை கவிஞர்.லலிதகோபன் வழங்கி னார். விமர்சன உரையினை முதன்மை விருந்தினர் பேராசிரியர்.ஏ.எப்.எம் அஷ் ரஃப் வழங்கினார். நாடறிந்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா.மு.சிவலிங்கம் அவர்கள் முதன்மை அழைப்பாளர் உரையை வழங்கினார்.

ந.பார்த்தீபன் சிறப்பு விருந்தினர் உரை வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.ஆர் தனபாலசிங்கம் வழங்கினார். நிகழ்ச்சித் தொகுப்பினை அதிபர் திரு மதி.சுஜந்தினி வழங்கினார்.

எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



# காஸாவிலுள்ள 25 மருத்துவமனைகளின் செயற்பாடு இஸ்ரேல் தாக்குதலால் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது



காஸாவில் உள்ள 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகளின் செயற்பாடுகள் இஸ்ரேல் தாக்குதலால் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

எஞ்சியுள்ள 11 மருத்துவமனைகளும் ஓரளவுக்கு மட்டுமே செயல்படுவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இது குறித்து ஐ.நா. பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காஸாவிலிருந்தபடி உலக சுகாதார அமைப்பின் ரிச்சர்ட் பீப்பர்கார்ன் தகவல் வழங்கியபோது, காஸாவிலுள்ள 3 இல் ஒரு பகுதிக்கும் குறைவான மருத்துவமனைகள்தான் ஓரளவுக்கு இயங்கி வருகின்றன

வெறும் 66 நாட்களில் காஸாவின் சுகாதாரக் கட்டமைப்பு குலைக்கப்பட்டுவிட்டது. அதற்கு முன்னர் இயங்கி வந்த 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகள் செயல்படமுடியாமல் முடங்கியுள்ளன. வடக்கு காஸாவில் ஒன்று, தெற்கு காஸாவில் 10 என மொத்தம் 11 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவையும் முழுமையாக இயங்கவில்லை.

காஸாவில் நடத்தப்படும் தாக்குதலால் மருத்துவமனைகளும் பிற சுகாதாரக் கட்டமைப்புகளும் இதற்கு மேலும் நிலைகுலைந்தால் அது தாங்கமுடியாத துயரத்தை ஏற்படுத்தும். அத்தகைய கொடுமையான நிலை ஏற்படக்கூடாது என்று வேண்டுகிறோம், என்றார்.

இஸ்ரேலுக்குள் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஊடுருவித் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர், அங்கு சுமார் 1,200 பேரை கொலை செய்ததோடு, பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் 240 பேரை அங்கிருந்து பிணைக்கைதிகளாகக் கடத்தச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பை முழுமையாக ஒழித்தக்கட்டப்போவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தத் தாக்குதலின்போது மருத்துவமனைகளும் குறிவைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இருந்தாலும், காஸா மருத்துவமனைகளை ஹமாஸ் அமைப்பினர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி வருவதாக இஸ்ரேல் கூறியது.

இந்தச் சூழலில், இஸ்ரேலின் தொடர் தாக்குதலால் காஸா பகுதியிருந்த 25 மருத்துவமனைகளின் செயல்பாடு முடங்கிவிட்டதாக உலக சுகாதார அமைப்பு தற்போது தெரிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் படையினர் கடந்த ஒக்டோபர் 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,412 ஆக அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

காஸா பகுதிகளில் இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 207 பேர் உயிரிழந்தனர், சுமார் 450 பேர் காயமடைந்தனர்.

இத்துடன், கடந்த சில வாரங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,412ஆக அதிகரித்துள்ளது. இது தவிர, இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 50,100 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

# பாகிஸ்தானில் கார் வெடிகுண்டு தாக்குதல் ராணுவ வீரர்கள் 23 பேர் கொல்லப்பட்டனர்



பாகிஸ்தானில் நடத்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் ராணுவ வீரர்கள் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கைபர்-பக்துன்கவா மாகாணத்தில் நேற்று நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் அண்மைக் காலங்களில் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலாகக் கருதப்படுகிறது.

பாகிஸ்தானின் கைபர்-பக்துன்கவா மாகாணத்தின் தெற்கு வஸிரிஸ்தான் மாவட்டத்தில் தேரா இஸ்மாயில் கான் தாராபன் என்ற இடத்தில் உள்ள ராணுவ நிலை மீது 6 பேர் கொண்ட குழுவொன்று நேற்று அதிகாலையில் தாக்குதல் நடத்தினர்.

அந்தத் தாக்குதலை பாதுகாப்புப் படையினர் முறியடித்ததைத் தொடர்ந்து, வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ஒரு வாகனத்தை செலுத்தி வந்து ராணுவ நிலைக் கட்டடம் மீது அவர்கள் மோதினர். அத்தோடு தற்கொலைத் தாக்குதலும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறியதால் கட்டடம் இடிந்து விழுந்தது. இதில், ராணுவ வீரர்கள் 23 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய 6 பேரும் கொல்லப்பட்டனர் என பாகிஸ்தான் ராணுவத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகள், கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

'பாகிஸ்தான் தலிபான்' எனப்படும் தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) அமைப்பின் துணை அமைப்பான தெஹ்ரீக்-ஏ-ஜிஹாத் பாகிஸ்தான் (டிஜெபி) என்ற அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 17 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

புதிதாகத் தொடங்கப்பட்ட டிஜெபி அமைப்பு அண்மைக் காலமாக பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. லாகூரிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாகிஸ்தான் விமானப் படை பயிற்சித் தளத்தில் இந்த அமைப்பு கடந்த நவம்பர் 4 ஆம் திகதி நடத்திய தாக்குதலில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த மூன்று விமானங்கள் சேதமடைந்தன.

பலூசிஸ்தான் மாகாணத்தில் ஜூலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். (04)




# மருத்துவமனைக்குள் புகுந்தது சிறுத்தை

இந்தியாவின் மகாராஷ்டிரத்தில் மருத்துவமனைக்குள் சிறுத்தை புகுந்ததால் நோயாளிகள் பதறியடித்து ஓடிய காணொளி இணையத்தில் வைரலாகி வருகின்றது.

நந்தூர்பார் மாவட்டம் ஷஹாதா பகுதியில் ஆதித்யா மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. இங்கு பணிபுரியும் தூய்மைப் பணியாளர் செவ்வாய்க்கிழமை காலை சிறுத்தை நடமாட்டத்தை மருத்துவமனை வளாகத்தில் கண்டுள்ளார்.

உடனடியாக ஊழியர்களிடம் இந்த தகவல் தெரிவித்ததை தொடர்ந்து, நோயாளிகள், உறவினர்கள், மருத்துவர்கள் உள்ளிட்டோர் மருத்துவமனைவிட்டு வெளியேறி அனைத்து கதவுகளையும் மூடியுள்ளனர்.

தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த வனத்துறையினர் சிறுத்தையை பத்திரமாக பிடித்து வனப் பகுதிக்குள் விட்டனர்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், திங்கட்கிழமை இரவு நேரத்தில் மருத்துவமனைக்குள் சிறுத்தை புகுந்து இருக்கக்கூடும் எனத் தெரிவித்தனர்.

மருத்துவமனை வளாகத்துக்குள் சிறுத்தை புகுந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (04)

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஊழல் வழக்கிலிருந்து நீதிமன்றால் விடுதலை

அல்-அஜீஸியா ஊழல் வழக்கிலிருந்து பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபை இஸ்லாபாத் உயர்நீதிமன்றம் நேற்று விடுவித்தது.

ஏற்கெனவே, அவர் மீது தொடரப்பட்டிருந்த அவென்பீல்ட் ஊழல் வழக்கிலிருந்தும் நவாஸை அந்த நீதிமன்றம் கடந்த மாதம் விடுவித்துள்ளது.

பனாமா ஆவண முறைகேடு விவகாரத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட நவாஸ/க்கு அல்-அஜீஸியா உள்ளிட்ட ஊழல் வழக்குகளில் ஊழல் தடுப்பு நீதிமன்றம் கடந்த 2018 இல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருந்தது. பின்னர் சிகிச்சைக்காக 2019 இல் லண்டன் சென்ற நவாஸ் அங்கேயே தங்கிவிட்டார். அவரை தப்பியோடிய குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது. இந்த நிலையில், கடந்த ஒக்டோபரில் பாகிஸ்தான் திரும்பிய நவாஸ், சிறைத் தண்டனைக்குக் காரணமான இரு ஊழல் வழக்குகளில் இருந்தும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். (04)



# தொழில் முயற்சியாண்மை செயலமர்வு சாய்ந்தமருதில் சான்றிதழ் வழங்கல்



(அஸ்ஹர் ஆதம்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில் தேடுகின்ற இளைஞர், யுவதிகளில் தொழில் முயற்சியாண்மை செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொறியியலாளரும் சொப்டா கெயார் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் ஈ.ஓ.ஓ. நிறுவனத்தின் தவிசாளருமான எம்.எம்.நசீர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், ஈ.எப்.ஓ நிறுவன பிரதித் தவிசாளர் எம்.எம். ஜுனைதீன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.கஸ்ஸாலி, மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. தால்சுறூன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.எம். ஷமீலுல் இலாஹி உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆனைகட்டியவெளியில் நடந்தது செத்தல் மிளகாய் அறுவடை விழா





(வி.ரி. சகாதேவராஜா)

விவசாயத் திணைக்களத்தினால் முன்மாதிரி துண்டச் செய்கைக்காக வழங்கப்பட்ட கலப்பின செத்தல் மிளகாய் செய்கையின் அறுவடை விழா நாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட ஆனைகட்டியவெளி கிராமத்தில் இடம்பெற்றது.

நாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குப் பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா, தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

MICH Hybrid 1 எனும் மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக இது இடம்பெற்றது.

மிளகாய்ச் செய்கையில் ஏற்பட்ட நோய் பீடை தாக்கங்கள் பற்றியும் இதன்போது தொளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

மேலும் பூச்சித் தாக்கத்தை கட்டுப்படுத்தக்கூடிய பூச்சிப் பாதுகாப்பு வலைகளும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கி வைக்கப்பட்டன.







# மயோன் முஸ்தபாவின் “தடயங்கள்” நூலுக்கு ஆக்கங்கள் அனுப்புமாறு கோரிக்கைவிடுப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

காலம் சென்ற முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் - மனித நேய மாமனிதர் மயோன் முஸ்தபாவின் நினைவேந்தல் நிகழ்வும் “தடயங்கள்” நூல் வெளியீடும் மனிதவள முகாமைத்துவ பேரவையின் ஏற்பாட்டில் விரைவில் சாய்ந்தமருதில் இடம்பெறவுள்ளன.

குறித்த நூலில் மர்ஹூம் மயோன் முஸ்தாபா மேற்கொண்ட உயரிய சமூகப் பணிகள், அபிவிருத்தித் திட்டங்கள், நாடு, சமூகம் மற்றும் பிராந்திய முன்னேற்றத்திற்கான அவரது எண்ணக்கருக்கள், தூரநோக்கு சிந்தனைகள் பதிவு செய்யப்படவுள்ளன.

அத்துடன் மயோன் முஸ்தபா தொடர்பாக உலமாக்கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்பினர் மற்றும் அவருடன் நெருங்கிப் பழகியோர், அவர் தொடர்பில் நல்லெண்ணம் கொண்டவர்களின் மனப் பதிவுகளை இந்நூலில் தொகுத்து வெளியிடுவதற்கும் மனிதவள முகாமைத்துவப் பேரவை தீர்மானித்துள்ளது.

ஆகவே, மர்ஹூம் மயோன் முஸ்தபா தொடர்பிலான தமது ஆக்கங்களும் இந்நூலில் இடம்பெற விரும்பினால் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னதாக ஒரு ஏ4 பக்கத்திற்கு உட்பட்டதாக அமையும் வண்ணம் தமது புகைப்படத்துடன் hrmcouncil17@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 0775746881 எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு மனிதவள முகாமைத்துவப் பேரவை கேட்டுள்ளது.

# புத்தளம் - கற்பிட்டியில் டொல்பின் வசந்தம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கற்பிட்டி கடலில் டொல்பின் வசந்த காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

விளையாட்டுத்தனமான டொல்பின்கள் மற்றும் திமிங்கிலங்கள் அலைகளில் சுதந்திரத்தை அனுபவிப்பதை அங்கு நேரில் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு, டொல்பின்கள் மற்றும் திமிங்கிலங்களை டிசம்பர் முதல் அடுத்த வருடம் ஏப்ரல் இறுதி வரை காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக காலை நேரங்களில் டொல்பின்களைக் காண்பது இலகுவானது என்றும், டொல்பின் மற்றும் திமிங்கிலங்களை இலந்தையடி, கண்டகுழி, கற்பிட்டி ஆகிய கடற் பிரதேசங்களில் காணக்கூடியதாக இருப்பதாகவும் அறியமுடிகிறது.

டொல்பின்கள், பொட்டில்நோஸ் டொல்பின்கள், புள்ளிகள் கொண்ட டொல்பின்கள், ஃப்ரேசரின் டொல்பின்கள் மற்றும் இந்தோ-பசிபிக் ஹம்பக் டொல்பின்களும் கற்பிட்டிக் கடலில் காணப்படுகின்றன.

அத்துடன் திமிங்கிலங்கள் வகையான நீல திமிங்கிலங்கள், மின்கே திமிங்கிலங்கள் மற்றும் ஹம்பக் திமிங்கிலங்களும் கற்பிட்டி கடலில் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

# சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலைய பவள விழா புதிதாக அமைத்த கலைமகள் கலையரங்கில் நடைபெற்றது





யாழ்ப்பாணம் - வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்ட பவள விழா, புதிதாக அமைக்கப்பட்ட கலைமகள் கலையரங்கில் வெகு விமர்சையாக நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை நிகழ்வாக காலை புதிதாக அமைக்கப்பெற்ற கலைமகள் கலையரங்கு சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமாரியினால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்சியாக அரங்கை சம்பிரதாய பூர்வமாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் பாலரூபன் திறந்து வைத்தார். இதன்பொழுது வலி மேற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நோபேட் யூலியன், சுழிபுரம் மத்தி மற்றும் மேற்கு கிராம அலுவலர்களான ஜீவராசா மற்றும் பிரதீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலையில் பவள விழா கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்பொழுது கலைமகள் சனசமூக நிலையத்தில் 1948 ஆம் ஆண்டு முதல் நிலையத்திற்காக சேவையாற்றி மறைந்த நிர்வாக உறுப்பினர்களின் திருவருவப் படங்களிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் வரவேற்பு இன்னியத்துடன் கலைமகள் அரங்கு நோக்கி விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரனால் பவள விழா சிறப்பு மலர் வெளியீடு செய்துவைக்கப்பட்டு, பாரம்பரிய கலைநிகழ்வுகள் இடம்பெற்று, இறுதி நிகழ்வாக இன்னிசை கானமும் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தனராக யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கனமூலை பாடசாலை மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சையில் சிறப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி, மார்கழி 13

அண்மையில் வெளியான சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் புத்தளம் தெற்கு கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் இம்முறை சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

பரீட்சை எழுதிய 37 மாணவர்களில் 30 மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் இது 13 வருடகால முயற்சியின் பின் கிடைக்கப் பெற்ற வெற்றி எனவும் இது 81.08 சதவீத சித்தி எனவும் பாடசாலையின் அதிபர் பீ.எம் முஸ்னி தெரிவித்தார்.

அத்தோடு, புத்தளம் வலயத்தில் தமிழ் மொழி மூலம் சாதரண தரப் பரீட்சைக்கு தோற்றும் 52 பாடசாலைகளில் 14 வது இடத்தில் தமது பாடசாலை காணப்படுவதுடன், புத்தளம் தெற்கு கோட்டத்தில் 9 வது இடத்தில் உள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

மேற்படி பெறுபேற்றை பெறுவதற்கு ஆலோசனை, வழிகாட்டல் வழங்கிய முன்னாள் அதிபர் எஸ்.எம்.எம் ஹனிபா, பாடசாலையின் பிரதி அதிபர் நௌஸாத், வகுப்பாசிரியர்களான பிர்தௌஸியா மற்றும் பர்மிளா, கற்பித்த பாட ஆசிரியர் குழாம், உதவி புரிந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம், பழைய மாணவியர் சங்கம், கனமூலை பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக அதிபர் முஸ்னி தனது நன்றிகளையும் மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

## மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 141 ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழில்



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 141 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கடந்த 11 ஆம் திகதி சிறப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வில், இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தூதரக அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.






## சிங்கப்பூரில் தானியங்கி பேருந்து தனியார் நிறுவனத்திற்கு அனுமதி



சிங்கப்பூரில் தானியங்கி பேருந்துகளை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்க அந்நாட்டு அரசு தனியார் நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளது.

சீனாவைத் தலைமையகமாகக் கொண்ட வீரைட் எனும் நிறுவனம் தானியங்கி போக்குவரத்துத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் முயற்சிகளை தொடர்ந்து செய்து வருகிறது. இப்போது தானியங்கி வாகனத்தை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கிய முதல் மற்றும் ஒரே நிறுவனமாக அது சாதனை படைத்துள்ளது.

ஏற்கனவே சீனா, அமெரிக்கா, அரபு இராச்சியம் போன்ற இடங்களில் தங்களது தானியங்கி வாகனங்களை சோதித்துப்பார்க்க இந் நிறுவனம் அனுமதி பெற்றுள்ள நிலையில், சிங்கப்பூரில் தனது தானியங்கிப் பேருந்துச் சேவையைத் தொடங்கியுள்ளது.

எம்1 மற்றும் டி1 எனும் இரண்டு அதிகாரப்பூர்வ அனுமதிகளை சிங்கப்பூரின் தரைவழிப் போக்குவரத்து ஆணையம் வழங்கியுள்ளது.

இந்த வீரைட் தானியங்கிப் பேருந்துகள் குறைந்த வேகத்தில், குறிப்பிட்ட வழிகளில், குறைந்த போக்குவரத்து நெரிசல்கள் உள்ள பகுதிகளில் தற்போது இயக்கப்படுகின்றன. சோதனை ஓட்டம் என்பதால் பேருந்தில் ஓர் ஓட்டுநர் அவசர கால பாதுகாப்பிற்காக இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## புத்தூர் வர்த்தக நிலையக் கொள்ளை சந்தேகத்தில் மூவர் நேற்று கைது

யாழ்ப்பாணம், அச்சுவேலி - புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையத்தை உடைத்து அங்கிருந்த பொருட்களை கொள்ளையடித்து சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் நேற்று (12) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கொள்ளையடித்த சில பொருட்களும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருந்த வாளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரும் அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர்களை இன்றைய தினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி புத்தூர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு சிசிரிவி கமரா, தொலைக்காட்சிப் பெட்டி, சிகரெட் பெட்டிகள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் எனப் பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாக உரிமையாளரால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. (01)

JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!






இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

Google Play
App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2023இல் வெளியிடப்பெற்றது.